# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

அக்னி ஸூக்தம், வருண ஸூக்தம், ஸ்ரீஸூக்தம் என்று பிரபலமாக பல ஸூக்தங் கள் இந்துமதத்தில் பேசப்படுகின்றன. ஸூக்தம் என்ற சொல் ஸு + உக்தம் என்று இரண்டு சொற்களின் கூட்டுச் சேர்க்கையாம். 'ஸு' என்ற அடைமொழி நன்றாக, சரியாக, அழுத்தமாக, சிறப்பாக என்று பொருள்படும். 'உக்தம்' என்பது சொல்லப்பட்டது என்று பொருள்படும். ஆக ஸூக்தம் என்பது 'சிறப்புற மொழியப்பட்டது' என்று பொருள்படும். ஸூக்தங்களில் சிறந்ததாக நாராயண ஸூக்தம் கருதப்படுகிறது. இது யஜுர்வேதம், தைத்ரீய உபநிஷத்தில் காணப்படுகிறது. இதில் நான்காவது ஸூக்தம்: "நாராயண பரம்ப்$_3$ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:"

உலகின் மிகத் தொன்மையான இலக்கியம் இந்துக்களின் வேதங்கள் தான் என்று இந்த ஆண்டு ஐக்கிய நாடுகளின் ஆய்வுமையம் ஒத்துக்கொண்டு பிரகடனப் படுத்தியுள்ளது. வைதிகமதம் என்பது அநாதியானது. உலகின் எல்லா மதங்களுக்கும் தோன்றியநாள் என்று ஒரு கணக்கு உண்டு. வைதிகமதத்துக்கு தோற்றம் என்று ஒன்று இல்லை. அதுவே அதன் சிறப்பு. காலத்தின் கண்ணுக்கு எட்டாத தூரத்திலிருந்து ஸ்ரீமந் நாராயணன் முழுமுதற்கடவுளாக கருதப்பட்டு வரும் நிலையை நாம் இங்கே காண்கிறோம். அது மட்டுமின்றி எம்பெருமானைப் பற்றிய பல விளக்கங்களையும் காண்கிறோம்.

இறைவன் எங்கோ இருந்துகொண்டு நம்மையெல்லாம் கவனித்துக் கொண்டு இருக்கிறான் என்கிற மேல்நாட்டு மதங்களின் கொள்கையை இந்த ஸூக்தத்தின் இரண்டாவது வரி மறுக்கிறது. அனைத்து பொருள்களுக்கும் ஆத்மாவாக உள்ளுறை பொருளாக அவன் ஊடுருவி நிற்பதை ஆத்மா என்ற சொல் விவரிக்கிறது. அதன் விளக்கமாக அடுத்த ஸூக்தத்தின் இரண்டாவது வரி "அந்தர்ப$_3$ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தி$_2$த:" என்று எடுத்துரைக்கிறது. அதாவது இவ்வுலகில் எல்லாவற்றையும் உள்ளும் புறமும் நாராயணன் வியாபித்து நிற்கிறான் என்று உண்மையை உரைக்கிறது.

'எங்கோ இருக்கும் இறைவனுக்கு நம் பிரார்த்தனை எப்படிக் கேட்கும்? எங்கோ இருக்கும் இறைவன் எப்படி எல்லாவற்றையும் அறிகிறான்?' என்பன போன்ற சிறுபிள்ளைத் தனமான கேள்விகளை இந்த ஸூக்தம் வெட்டிச் சாய்த்துவிடுகிறது. பகவான் நமக்குள் இருக்கிறான், நாலாபுறமும் இருக்கிறான் என்கிற அந்தர்யாமி தத்துவம் வைணவத்துக்கே உரிய தனிப்பெருமை. இந்த ஞானம் பரிபூர்ணமாக இருந்ததால்தான் ப்ரஹ்லாதனை யானைகளால் மிதிக்க முடியவில்லை. பாம்புகளால் கடிக்க முடியவில்லை. சமுத்திரத்தால் அமிழ்த்த முடியவில்லை. 'சகலமும் நாராயணனின் சரீரமாக இருக்கும் பொழுது எனக்கு எதனால் எப்படி தீங்கு வரும்?' என்ற உறுதியான நம்பிக்கை அந்த தைத்தியகுல வேந்தனை காப்பாற்றியது. எங்கோ இருந்த கிருஷ்ணனை திரௌபதி பிரார்த்தித்து சேலை பெற்ற ரகசியமும் இதுதான். கண்ணன் துவாரகாவாசி மட்டுமல்ல, இதயம் என்ற ஹ்ருத்கமலவாசியும் கூட என்ற

ஞானம் தான் அவளுக்கு கண்ணனின் அருகாமையை எடுத்துக் காட்டியது.

பகவானின் இந்த வியாபகத்வத்தைத் தான் புருஷ ஸூக்தத்தின் முதல் ஸூக்தம் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்" என்று முழங்குகிறது. ஸ்ரீமந் நாராயணனுக்கு ஆயிரக் கணக்கில் தலைகள், கண்கள், பாதங்கள் என்பது பொருள். அதாவது அவன் எங்கும் எல்லா ஆற்றல்களையும் உடையவனாய் இருக்கிறான் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. "தோள்களாயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்! துணைமலர்க் கண்கள் ஆயிரத்தாய்! தாள்களாயிரத்தாய்!" என்று ஆழ்வார் குறிப்பிடுவதும் இந்த கருத்தைத் தான். ஆயிரம் என்பது அனந்தம் என்று இங்கே பொருள்படும்.

"இறைவனைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. யாரும் கண்டுபிடிக்கவும் முடியாது." என்று கைவிரிக்கும் உலகின் மற்ற மதங்கள் நாணித் தலை குனியும்படி, புருஷஸூக்தமும் நாராயண ஸூக்தமும் பகவானுடைய மஹிமையை அங்கமங்கமாக உலகுக்கும் பறைசாற்றுகின்றன.

இதயத்தின் நடுவே பகவான் அந்தர்யாமியாக இருக்கும் நிலையை "தஸ்ய மத்$_4$யே வந்ஹிசிக$_2$ா அணீயோர்த்$_4$வா வ்யவஸ்தி$_2$த: நீலதோயத$_3$மத்$_4$யஸ்த$_2$ா வித்$_3$யுல்லேகே$_2$வ ப$_4$ாஸ்வரா நீவார ஷீ கவத் தந்வீ பீதாப$_4$ா ஸ்யாத் தநூபமா" என்று நாராயணஸூக்தம் வர்ணிக்கிறது. இதயத்தின் நடுவே மெல்லியதாக, மேல்நோக்கியதாக நீலமேகத்தை நடுவில் கொண்ட, மின்னல் கொடிபோல் ஒளியோடு, மஞ்சள் நிறமாக நெல்நுனிபோல் மெல்லியதாக, ஒப்பற்றதாக இருப்பதுதான் பரமாத்மா என்பது இதன் பொருள். உலகில் எந்தமதம் பகவானை இப்படிக் கண்டு சொல்லி இருக்கிறது? உள்நோக்கிய பார்வை உள்ள வைதிக ஞானிகள் நெடுங்காலம் செய்த தவத்தின் பயனாலும் இறை அருளாலும் இப்படி அதிமானுஷ சாதனை புரிந்திருக்கி றார்கள். எந்த இரண்டு ப்ரம்ம ஞானிகளும் ஒருவருக்கொருவர் மாறுபடச் சொல்லவில்லை. அனைத்து சாத்விக ரிஷிகளும் ஒன்றே போலப் பேசி இருக்கிறார்கள். தனித்தனி முயற்சியினால் அவர்கள் விண்டு சொன்னது ஒன்றே போல் இருக்கிறதென்றால் அது மெய் ஞானமாகத்தானே இருக்கமுடியும்? பொய் ஞானமாக இருந்தால் கூற்றுகளில் முரண்பாடு ஏற்படும் அல்லவா?

முனிவர்கள் புதிதாக எதையும் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கனவே இருந்த சத்தியத்தைத்தான் இருள் நீக்கி வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். ஸ்வாமி ராமாநுஜரும் அப்படித்தான். இடைப்பட்ட காலத்தில் சிறிது புகழ் மங்கி இருந்த அநாதிகால விசிஷ்டாத்வைத வைணவத்தை தூசு தட்டி மக்கள் பார்வைக்குமுன் கொண்டுவந்து வைத்தார். இப்படிக்காலம் காலமாக உலகையே வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் இந்த பாரத தேசத்தில் திகழ்ந்து வரும் வைதிக உண்மைகளை மிகவும் சாதாரணமாக எடைபோட்டு மேல்நாட்டு மோஹத்தினால் அந்த நாட்டுக் கருத்துக்களை சிலாக்யபடுத்தி நம்நாட்டு சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்த எண்ணும் இன்றைய நாகரீகப்போக்கு எவ்வளவு வேதனை தருவதாக இருக்கிறது? கையிலிருக்கும் வைரங்களை விட்டெறிந்துவிட்டு மண்ணுக்குள் கிடக்கும் ஈயத்துண்டுகளையும் இரும்பு துண்டுகளையும் தேடி அலையும் மடையரைப் போல் இன்றைய சமுதாயம் நம் பாரம்பரிய பாரதக்கல்வியை புறக்கணித்துவிட்டு பன்னாட்டு நாகரீகக் கல்வியில் திளைத்திருப்பது நமக்கு மட்டுமல்ல. பிறநாட்டவர்க்குக் கூட ஏளனச் சிரிப்பை உண்டுபண்ணுகிறது. நம்நாட்டு ஆன்மிகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்போம்! வெளிநாட்டுப் போலிக்கல்விக்கு மயங்காதிருப்போம்!